முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1434

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.09.2023**, சனிக்கிழமை

1. அருள்வேலி கொண்ட அரங்கனே
அறம்வேலி கொண்ட தேசிகனே
இருள் நீக்கி உலகை மீட்க
என் சரவணஜோதி ஏற்றி அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 16 ம் நாள், 02.09.2023 சனிக்கிழமை)
வரம்தந்து யான் உன்னுள்
வையகத்தில் ஆற்றல் பெருக காத்துவருகின்றேன்
3. வருகவே என் அவதாரத்தில்
வல்லமைகூடும் இந்த உலகிற்கு
வரமாக உலகோர் ஞானவான்களாகி
வழிமொழிந்து உன் அறம் தர்மத்தை ஏற்று
4. ஏற்று உலகமெங்கும் சேவையாற்றி இந்த தர்மத்தின் வழியே
உலகை ஆறுமுகன் யான் மீட்பேன்
மீட்பேன் உன் சக்திகொண்டு
மேலான உன் நாமஜெபத்துக்கு இறங்கி
5. காலமதில் ஆறுமுகன் யான் இறங்கி கருணையோடு
உலகமெங்கும் கட்டளையாக கிளைச் சங்கங்களை பெருக்கி
பெருக்கியே அரங்கன் நீ அவ்விடமெல்லாம் சூட்சுமமாய் சென்றுவர
அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
6. வரமாக இந்த மாற்றம் வையகத்தில்
அரங்கன் உன் அவதாரத்தில் அரங்கேறும்
ஆகவே உலகோர் உன்வழி தொடர்ந்து வந்து
அரங்கா முருகா என ஜெபதபத்தில்

7. அறத்தை கைவிடாது தொடர்ந்து செய்து வந்தால்
வரம் கூடி உலகம் ஞானலோகமாகும்
வடிவேலன் என் தலைமை கொண்ட
ஞான ஆட்சிக்காலமாகவும் மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–